00169

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**
**சட்டக்கற்கைகள் திணைக்களம்**
**சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்- 2023/2024**
**இறுதிப்பரீட்சை**
**மட்டம் - 5**
**LLU5712- பகிரங்க சர்வதேச சட்டம்**
**காலம் - மூன்று (3) மணித்தியாலங்கள்**

திகதி: 11.05.2025 நேரம்: பி.ப 1.30 -பி.ப 4.30

**ஐந்து (05) வினாக்களிற்கு மட்டும் விடையளிக்க.**
**தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

1. (அ) பொருத்தனைகள் வழக்காறுகளின் தொகுப்பாக இருப்பதுடன் , புதிய விதிகளின் உருவாக்கம் ஆனது நாகரிகமடைந்த நாடுகளின் பொதுவான வழக்கத்தால் ஏற்கப்பட்டதும் இனம்காணப்பட்டதும் எனின் , ஓரளவிற்கு பொருத்தனைகள் ஆனவை வழக்காறுகளின் ஒரு பிரகடனம் என்பது நிருபணமே.

   மேற்குறிப்பிட்ட கூற்றின் வலிதுடைமையை பொருத்தமான சட்ட எடுத்துக்காட்டுகளுடன் நுணுக்கமாக ஆராய்க.

   **(15 புள்ளிகள்)**

   (ஆ) பிணக்குகளைத் தீர்ப்பதற்கு சர்வதேச சட்டத்தின் கீழ் தோற்றுவாய்கள் காணப்பட்டபோதும் , திறத்தவர்கள் இணங்கினால் சர்வதேச நீதிமன்றம் ஆனது வழக்கொன்றை ஒப்புரவு மற்றும் நியாயம் என்பனவற்றின் மூலம் தீர்க்க முடியும் என்பதுடன் நீர் இணங்குகிறீரா? உதாரணங்களை வழங்குக.

   **(05 புள்ளிகள்)**

2. மித்ரா மாதவா என்பவள் பூமி எனும் தீவின் நகைச்சுவை கலைஞரும் இளம் சமூக ஆர்வலரும் ஆவாள். 5 ஆம் திகதி ஏப்ரல் 2025 அன்று சமூக வலைத்தளத்தில் பகிரப்பட்ட அவளது நகைச்சுவை நிகழ்ச்சி ஒன்று வெறுப்பு பேச்சாக அமைந்ததாகவும் , நாட்டின் மதங்களை தூற்றியதாகவும் குற்றம் சாட்டப்பட்டு பொலிசாரால் கைது செய்யப்பட்டாள். அவளது அந்நிகழ்வின் திருத்தப்பட்ட வீடியோவிற்கு சமூக வலைத்தத்தளத்தில் அதிக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. பூமியின் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளிற்கான சர்வதேச பொருத்தனைகளிற்கான (ICCPR ) சட்டத்தின் கீழ் மித்ரா குற்றம் சாட்டப்பட்டாள். இச்சட்டத்தின் பிரிவுகள் 5 மற்றும் 6 என்பன எவ்வின மக்களினதும் மதரீதியான உணர்வுகளை பாதிக்கும் தீய எண்ணமும் மதங்களை காயப்படுத்தும் வேண்டுமென்ற எண்ணமும் குற்றங்கள் ஆகும் என்றுரைக்கின்றன. ICCPR – பொருத்தனையின் கீழ் பூமியின் சர்வதேச கடப்பாடுகளை உள்நாட்டிற்குள் உள்வாங்குவதற்கு இயற்றப்பட்டதே ICCPR சட்டம் ஆகும். மித்ராவிற்கு எதிராக வழக்கு ஒன்று முன்வைக்கப்பட்டதுடன் அது அடுத்த வாரம் விசாரிக்கப்பட உள்ளது.

   பூமியின் அறிஞர்களும் மனித உரிமை ஆர்வலர்களும் இச்சம்பவம் ஆனது பேச்சு சுதந்திரத்தினதும் , ICCPR – பொருத்தனையின் கீழ் அதனை உள்நாட்டுக்குள் உள்வாங்குவதற்கான பூமியின் சர்வதேச சட்ட கடப்பாடுகளதும் மீறல் என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

பூமியின் உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டக் கடப்பாடுகள் என்பன இலங்கையினுடையதை ஒத்தன எனக் கருதுக.

இவ்வழக்கின் நீதிபதி நீர் எனின் உமது நுணுக்கமாக தீர்ப்பு யாதாக இருக்கும்? உமது தீர்ப்பின் காரணங்கள் பொருத்தமான சட்ட எடுத்துக்காட்டுகளால் ஆதாரப்படுத்தப்படவேண்டும்.

**(20 புள்ளிகள்)**

3. பின்வரும் கூற்றுகளின் வலிதாந்தன்மையை பொருத்தமான சட்ட உதாரணங்களுடன் நுணுக்கமாக ஆராய்க.

(அ) கூட்டுப்பாதுகாப்பு ஆனது சர்வதேச சமூகத்தின் தகைமையுள்ள ஒரு உறுப்பால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

**(10 புள்ளிகள்)**

(ஆ) சமகால சர்வதேச சட்டத்தில் ஆட்புலப் பரப்பை கையகப்படுத்துவதற்கான முறைகள் அதிகளவில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

**(10 புள்ளிகள்)**

4. பூமி மற்றும் பிஸ்டா என்பன 'மூர்' எனும் நிலப்பரப்பை உரிமைக் கொள்வதற்கான ஒரு பிணக்கின் மீது ஒரு கசப்பான உறவின் வரலாற்றைக் கொண்டுள்ள அயல் நாடுகள் ஆகும். மூர் ஆனது பூமி மற்றும் பிஸ்டா அகியன பகிருகின்ற எல்லையில் அமைந்துள்ளது. எவ்வாறாயினும் பூமி மற்றும் பிஸ்டா என்பன அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விதிகளிற்கமைய தமது இராஜதந்திர உறவுகளை பேணுகின்றன. இத்தகு பிண்ணனியில் 2025 ஏப்ரல் ஆரம்பத்தில் பூமியின் உள்நாட்டு எல்லையில் உள்ள இயற்கை சுற்றுலா தளமான 'போர்ள்' எனும் இடத்திற்கு வருகை தந்திருந்த சுற்றுலா பயணிகளை பிஸ்டானின் ஒரு தீவிரவாதக் குழுவினர் கொலை செய்திருந்தனர்.

இச்சம்பவத்தின் பின்னர் பூமியின் உளவுத்துறையானது பூமியல் உள்ள பிஸ்டானிற்கான இராஜதந்திர தூதுவரான சிம்சன் என்பவனின் அறிவு மற்றும் உதவி என்பனவற்றுடனே பிஸ்டானின் தீவிரவாதிகளால் இக்கொலைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு அறிக்கை ஒன்று வெயிளிடப்பட்டது. தாக்குதல் நடாத்தப்பட்ட தினத்தன்று பூமியில் உள்ள பிஸ்டானின் தூதரகத்திற்கு கேக் ஒன்று கிடைக்கப்பெற்றதாகவும் சிம்சன் தனிப்பட்ட விழா ஒன்றைக் கொண்டாடியதாகவும் கண்டறியப்பட்டது. பிஸ்டானின் தீவிரவாதிகளின் தாக்குதல் மற்றும் இராஜதந்திர தூதுவரான சிம்சனின் குற்றம் சாட்டப்பட்ட தொடர்பு என்பனவற்றுக்கான பதிலாக , பூமி ஆனது பிஸ்டானிற்கு எதிராக ஒரு தொடரான பழிவாங்கும் இராஜதந்திர நகர்வுகளை அறிவித்தது.

இந்நகர்வுகள் பூமி மற்றும் பிஸ்டான் என்பனவற்றிற்கிடையிலான சகல இருபுடை உடன்படிக்கைகளினதும் இடைநிறுத்தத்தை உள்ளடக்கியதுடன் , பூமி மற்றும் பிஸ்டான் என்பனவற்றிற்கிடையிலான விசேட விசா திட்டங்களையும் மீளப்பெற்றது. இவற்றின் விளைவாக பூமியின் பழிவாங்கல் நடவடிக்கைகள் தீவிரவாத தாக்குதலில் பிஸ்டானின் நிச்சயமான தொடர்பை குறித்துரைப்பது ஏற்கத்தக்கதன்று என பிஸ்டான் தெரிவித்தது. எவ்வாறாயினும் பிஸ்டான் ஆனது தூதுவர் சிம்சனிற்கு அளித்திருந்த இராஜதந்திர விடுபாட்டுரிமையை மீளப்பெறுவதற்கு மேற்கொண்டுள்ள தீர்மானத்தை அறிவித்ததுடன் சிம்சனிற்கெதிராக விசாரணையை ஆரம்பிக்கவும் பூமிக்கு சம்மதம் வழங்கியது.

மேலுள்ள சம்பவத்தில் இருந்து எழும் சட்ட விளைவுகளை உமது சர்வதேச சட்டம் தொடர்பான அறிவைக் கொண்டு ஆராய்க. உமது ஆராய்வு பொருத்தமான சட்ட உதாரணங்களால் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

**(20 புள்ளிகள்)**

5. பொருத்தணைகள் மீதான சட்டம் தொடர்பான உமது அறிவை பயன்படுத்தி பின்வரும் கூற்றுக்களின் வலிதாந்தன்மையை ஆராய்க. உமது ஆராய்வு பொருத்தமான சட்ட உறுப்புரைகளையும் உதாரணங்களையும் உள்ளடக்க வேண்டும்.

(அ) 1979 ஆம் ஆண்டின் பெண்களிற்கெதிரான சகல பாராபட்சங்களையும் ஒழித்தல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பொருத்தணையின் (CEDAW) ஒரு சில உறுப்புரைகளை பல இஸ்லாமிய நாடுகள் அவற்றின் கீழான கடப்பாடுகள் ஆனவை பெண்கள் மற்றும் பரம்பரை சொத்துக்கள் போன்ற விடயங்களில் உள்நாட்டு இஸ்லாமிய கோட்பாடுகளிற்கும் வழக்கங்களிற்கும் பொருந்தாத காரணத்தால் ஒதுக்கியிருந்தன.

**(08 புள்ளிகள்)**

(ஆ) இலங்கையின் சனாதிபதி நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தி பொருத்தணை ஒன்றை ஏற்று அங்கீகரிக்க முழு அதிகாரத்தையும் கொண்டுள்ளார்.

**(06 புள்ளிகள்)**

(இ) சர்வதேச சட்டம் ஆனது பொருத்தணை ஒன்றின் சாதாரணப் பொருள் ஆனது அர்த்தமற்று இருக்கும் போது பொருத்தணைகளின் துணைவிதிகளைக் கொண்டு (*supplementary means*) தீர்த்துக் கொள்வதற்கு நாடுகளை அனுமதிக்கிறது.

**(06 புள்ளிகள்)**

6. *பாதுகாப்பு சபை ,*

*அன்று நியுயோர்க் , வாசிங்டன் , D.C. மற்றும் பென்சில்வெனியா போன்ற இடங்களில் இடம்பெற்ற தீவிரவாத தாக்குதல்கள் தொடர்பான ஐயமற்ற கண்டனங்களை மீண்டும் உறுதிப்படுத்துவதுடன் , ...*

*நாடுகள் மீது பின்வருவனவற்றை தீர்மானிக்கிறது ...*

*(ஆ) தகவல்களை பரிமாறுவதன் மூலம் பிற நாடுகளிற்கு எச்சரிக்கை வழங்குதல் உள்ளடங்கலாக தீவிரவாத செயற்பாடுகளை தடை செய்வதற்கான அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ;*

*(இ) தீவிரவாத தாக்குதல்களை தடுத்தல் மற்றும் ஒடுக்குதல் என்பனவற்றுடன் அத்தகு செயற்பாடுகளை மேற்கொள்ளும் குற்றவாளிகளிற்கெதிராக நடவடிக்கை எடுத்தல் முதலானவற்றிற்கு உடன்படிக்கைகள் , இருபுடை உடன்படிக்கைகள் , பலபுடை உடன்படிக்கைகள் மூலம் ஒத்துழைப்பை வழங்குதல் ;...*

United Nations Security Council Resolution 1373 (28 September 2001)

மேலுள்ள பாதுகாப்புச்சபை தீர்மானத்தின் அடிப்படையில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச்சபை எவ்வாறு 2001 இல் ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்ற தாக்குதலின் பின்னணியில் நாடுகள் தற்பாதுகாப்பிற்கமைய செயற்படுதலை அதிகமாக ஏற்றுக்கொள்ள ஆரம்பித்துள்ளன என ஆராய்க.

**(20 புள்ளிகள்)**

**பின்வரும் சந்தர்ப்பத்தின் கீழ் வினா இலக்கங்கள் 7 மற்றும் 8 என்பனவற்றிற்கு விடையளிக்க.**

'கொடன்' என்பது 'இடையர்களின் பள்ளத்தாக்கு' எனும் பொருளைக் கொண்ட போ்ள் எனும் நாட்டின் அதிகம் பாா்வையிடப்படும் சுற்றுலாத் தளம் ஆகும். கொடன் ஆனது போ்ள் நாட்டின் எல்லையில் அமைந்துள்ளதுடன் , போ்ள் நாட்டிற்கும் அதன் அண்டைய நாடான ரூபி என்பனவற்றிற்கு இடையில் எல்லை பிணக்கு ஒன்றும் காணப்படுகிறது. ஏப்ரல் 10 ஆம் திகதி 2025 அன்று பிற்பகல் 2 மணியளவில் அருகிலுள்ள காட்டிலிருந்து உருமறைப்பு ஆடைகள் அணிந்த ஆயுதம தரித்த ஆட்கள் வெளிப்பட்டு கொடனின் சுற்றுலா பயணிகள் மீது தாக்கினா். இத்தாக்குதலின் விளைவாக போ்ளின் பிரஜைகளான 260 சுற்றுலா பயணிகள் கொல்லப்பட்டதுடன் , நூற்றுக்கணக்கானோா் காயமுற்றனா். போ்ளின் அண்டைய நாடான ரத்னாவின் சுற்றாடற் துறை அமைச்சா் செல்டன் அவா்கள். தனது முழு குடும்பத்தாருடன் அன்றைய தினம் கொடனில் தனிப்பட்ட வருகையை மேற்கொண்டிருந்தாா். இக்குறித்த தாக்குதலில் செல்டனும் அவரது முழுக்குடும்பத்தாரும் கொல்லப்பட்டனா்.

இச்சம்பவத்தை தொடா்ந்து நாடுகள் போ்ளிற்கும் ரூபிக்கும் இடையில் உள்ள எல்லை பிணக்கின் காரணமாக போ்ளிற்கான எச்சரிக்கையாக அமைந்த இத்தாக்குதல் மீது ரூபி நாட்டின் கலகக் குழு ஒன்று உரிமைக் கோரியதாக தெரிவித்து போ்ளின் உளவுத்துறை அறிக்கை வெளியிட்டது. எவ்வாறாயினும் தாக்குதலிற்கான உதவி , ஒத்துழைப்பு மற்றும் திட்டமிடல் என்பன வைரா எனும் நாட்டிலிருந்து செயற்படும் அரசு சாராத துணை இராணுவப்படை *(paramilitary)* ஒன்றான 'பிளக் மிஸ்டா்ஸ்' எனும் குழுவினால் கட்டுப்படுத்தப்பட்டதாக இவ்வறிக்கை மேலும் தெரிவித்தது. உளவுத்தறை அறிக்கை மேலும் தெரிவித்ததானது வைரா நாட்டின் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் பிளக் மிஸ்டா்ஸின் ஆலோசகா்கள் என்றும் வைரா நாட்டின் பாதுகாப்பு அமைச்சின் உயா்நிலை அதிகாரிகள் இத்தாக்குதல் குறித்து அறிந்திருந்தும் , அதனை போ்ள் நாட்டிற்கு தெரிவிப்பதற்கோ அல்லது ஏதேனும் விசாரணை நடவடிக்கையை மேற்கொள்ளவோ தவறியிருந்ததை உறுதிப்படுத்துகிறது.

7. தரப்பட்டுள்ள சம்பவத்தின் நாடுகள் தமது அக்கறைகளிற்காக சா்வதேச சட்டத்தில் நியாயாதிக்கம் மீதான கோட்பாடுகளை பயன்படுத்தி எவ்வாறு தொடா்புறலாம். பொருத்தமான சட்ட உதாரணங்களுடன் ஆராய்க.

**(20 புள்ளிகள்)**

8. தரப்பட்டுள்ள சம்பவத்தில் வைரா நாட்டின் பொறுப்படைமையைக் கோர போ்ள் நாட்டிற்குள்ள சட்டத்தெரிவுகள் குறித்து ஆராய்க. சட்ட உதாரணங்களை வழங்குக.

**(20 புள்ளிகள்)**

பதிப்புரிமை பெற்றது